**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 96/2025**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 28.08.2025.**

| | |
|---|---|
| **Name : சந்திரமதி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஆண்டிக்கரையில் குடியிருந்து வீட்டிலிருந்து வருகிறேன். விபத்தில் இறந்தது என் கணவர் ஆவார். கடந்த 15.10.2023 ம் தேதியன்று மாலை 3.15 மணிக்கு என் கணவர் இரு சக்கர வாகனத்தில் பொட்டனேரியிலிருந்து பெட்ரோல் போடுவதற்காக சென்ற போது லாரி ஒன்று மேட்டூரிலிருந்து வந்து மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தின் காரணமாக நெஞ்சு, தலை, கண், கால் ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டு ஆம்புலன்ஸ் மூலமாக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தார்கள். பிறகு மேல் சிகிச்சைக்காக லேசம் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்ற போது மாலை 6 மணிக்கு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். பிரேத பரிசோதனையின் போது நான் உடனிருந்தேன். எனக்கு ஆம்புலன்ஸ் டிரைவர் விபத்து பற்றி போன் மூலமாக சொன்னார். இது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் மனு அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை—**

2) சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் சம்பவம் நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் ஆமாம். நான் செல்லும் போது யார் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் என்னுடன் வந்த நபர் புகார் எழுதி கொடுத்தார். நான் கையொப்பம் செய்தேன். என் கணவர் இறந்த பின்னர் இரவு 11 மணியளவில் சேலத்திலிருந்து வந்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் ஆமாம்.

3) விபத்து பற்றி போலீசார் ஏதாவது கேட்டார்களா என்றால் எப்படி விபத்து நடந்தது என்று மட்டுமே கேட்டார்கள். சம்பவத்திற்கு பின்னிட்டு என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் ஆமாம்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 96/2025**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 28.08.2025.**

| Name : குருசித்ரன் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் சந்ததானப்பட்டியில் குடியிருந்து தனியார் நிறுவனம் நடத்தி வருகிறேன். கடந்த 15.10.2023 ம் தேதியன்று மாலை 3.15 மணிக்கு நான் சேலம் சென்றுவிட்டு என் இரு சக்கர வாகனத்தில் குஞ்சாண்டியூர் நோக்கி வந்த போது பொட்டனேரி லாரி அசோசியேஷன் பெட்ரோல் பங்க அருகே ஒரு இரு சக்கர வாகனம் பொட்டனேரியிலிருந்து குஞ்சாண்டியூர் நோக்கி வந்த போது சிக்னல் போட்டு கையால் சைகை காட்டி வலது பக்கம் பெட்ரோல் போடுவதற்காக திரும்பும் போது குஞ்சாண்டியூரிலிருந்து வந்த டேங்கர் லாரி வந்து இரு சக்கர வாகனத்தின் முன்பக்கமாக மோதி விபத்து ஏற்பட்டது

2) விபத்தின் காரணமாக நெற்றி, நெஞ்சு, கால் ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். லாரி மற்றும் இரு சக்கர வாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. இந்த விபத்து லாரி அஜாக்கிரதையாக வந்து மோதியதால் விபத்து ஏற்பட்டது. கூட்டத்தில் இருந்த போது பதற்றத்தில் நான் லாரி ஓட்டுநரை பார்த்து அடையாளம் சொல்ல இயலவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–இல்ல**

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 96/2025**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 28.08.2025.**

| | |
|---|---|
| **Name : பிரபு** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஆண்டிக்கரையில் குடியிருந்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்தது என் மாமா செம்பா கவுண்டராவார். கடந்த 15.10.2023 ம் தேதியன்று மாலை 3.15 மணிக்கு நான் வீட்டிலிருந்த போது ஆம்புலன்ஸ் டிரைவர் எனக்கு தகவல் சொல்லி என் மாமா இரு சக்கர வாகனத்தில் பொட்டனேரி பெட்ரோல் பங்க் அருகே பெட்ரோல் அ டிப்பதற்காக உள்ளே சென்ற போது மேட்டூரிலிருந்து வந்த டேங்கர் லாரி வந்து இரு சக்கர வாகனத்தின் முன்பக்கமாக மோதி விபத்து ஏற்பட்டது

2) விபத்தின் காரணமாக நெற்றி, நெஞ்சு, கால் ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பிரேத பரிசோதனையின் போது நான் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் சம்பவம் நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/- தே.மயில்சாமி**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 96/2025**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 28.08.2025.**

| | |
|---|---|
| **Name : சிவராஜ்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் ஆண்டிக்கரையில் குடியிருந்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்தது என் உறவினர் செம்பா கவுண்டராவார். கடந்த 2023ம் வருடம் மதியம் 12 மணிக்கு நான் வேலைக்கு சென்ற போது ஆம்புலன்ஸ் டிரைவர் எனக்கு தகவல் சொல்லி என் உறவினர் இரு சக்கர வாகனத்தில் பொட்டனேரி பெட்ரோல் பங்க் அருகே பெட்ரோல் அ டிப்பதற்காக உள்ளே சென்ற போது மேட்டூரிலிருந்து வந்த டேங்கர் லாரி வந்து இரு சக்கர வாகனத்தின் முன்பக்கமாக மோதி விபத்து ஏற்பட்டது

2) விபத்தின் காரணமாக நெற்றி, நெஞ்சு, கால் ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பிரேத பரிசோதனையின் போது நான் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் சம்பவம் நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆம்புலன்ஸ் டிரைவர் தான் தகவல் கொடுத்ததாக போலீசார்

விசாரணையில் சொன்னேன் என்றால் ஆமாம். மதியம் 12 மணிக்கு விபத்து நடந்ததாக எனக்கு எப்படி தெரியும் என்றால் ஆம்புலன்ஸ் ஓட்டுநர் சொன்னார். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**